Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - புரட்டாதி ★ விலை 25 ★ இதழ் 8

# நல் ஆயர் வாழ்க!

## (அருள்திரு கென்றி பொன்னையா அடிகள்)



**இம்மதி 21ந் தேதி நம் ஆயர் இக்னேசியுஸ் திறி கேறேஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் மேற்றிராணிப் பட்டம் பெற்றதன் 23வது ஆண்டு நிறைவு விழாவைக் கண்டடைய இருக்கின்றார்கள்.**

அன்பாகவும் அதிகாரத்துவமின்றியும் தமக்குக்கீழ் பணி புரியும் குருக்கள் நல்ல சேவை உணர்வில் வளர அவர்களைப் பேணி நடத்துவதுதான் ஒரு ஆயரின் தலையாய கடமையென்றால், நமது ஆண்டகை அவர்கள் இக்கடமையைப் பரிபூரணமாகச் செய்து வருகிறார் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

குருக்கள் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்துரையாடிய பின்பே ஒரு முடிவுக்கு வருவதும், பொதுமக்களாலும் பிறராலும் அவர்கள்மேல் சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களை உடனே ஏற்றுக் கொள்ளாமையும் மேற்கண்ட கருத்துக்குச் சான்று பகர்வனவாகும். இந்த மறைமாவட்டத்தில் குருக்களின் தொகை பெருக வேண்டி அவர் ஆற்றிவரும் பணி எழுத்திற்கு அப்பாற்பட்டது. குறிப்பாக திருமலையில் எரு சிறிய குருமடத்தை நிறுவி குருகுல வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டுள்ளார். நமது ஆண்டகை அவர்கள் இம் மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டபோது இங்கு பணியாற்றிய சுதேசக் குருக்களின் தொகை பதின்மூன்று. இப்போது இந்தத் தொகை முப்பத்திமூன்றாக உயர்ந்துள்ளது. இக்குருக்களில் ஆறுபேர் வெளிநாடுகளில் பயின்று இறையியல் கலையில் பட்டம் பெற்றுள்ளனர். மிக விரைவில் இன்னும் மூன்றுபேர் இக்கலையில் பட்டம்பெற இருக்கின்றனர். தமிழகத்தில் சிறப்புற விளங்கும் பச்சையப்பன் கல்லூரியில் ஒரு குருவானவர் **B.A.** வகுப்பு மாணவராகப் பயின்று கொண்டிருப்பதும், இவருடைய ஆளுகையின் கீழ் ஏற்பட்ட சிறப்புக்குரிய அம்சமாகும்.

(16ம் பக்கம் பார்க்கவும்)

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## 18. திவ்விய பூசைப்பலியில் பங்குகொள்ளும் முறை.

"நம் மீட்பர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவிலே தமது இறுதி இரா உணவின் போது தம் திருஉடல் திரு உதிரத்தின் நற்கருணைப்பலியை ஏற்படுத்தினர். தாம் மீண்டும் வருமளவும் நூற்றாண்டுகளாகத் தமது சிலுவைப்பலியை நிலவச் செய்யவும், தம் அன்பு மணமகளாம் திருச்சபையிடம் தமது சாவு, உயிர்ப்பு ஆகியவற்றின் நினைவுச் சின்னத்தை விட்டுச் செல்லவும் இப்பலியை ஏற்படுத்தினர். இது அன்பின் திரவருட்சாதனம், ஒற்றுமையின் அடையாளம், பரம அன்பின் பிணைப்பு, பாஸ்கா விருந்து". ஆகவே "விசுவாசத்தின் இந்த மறைபொருள் நிறைவேற்றப்படும்பொழுது கிறிஸ்தவ விசுவாசிகள் அதனுடன் தொடர்பற்றவர்கள்போல், அல்லது மௌனம் சாதிக்கும் பார்வையாளர்கள்போல் இராமல், சடங்குகள், செபங்கள் ஆகியவற்றின் வாயிலாக அதனை நன்ருகப் புரிந்துகொண்டு, அப் புனிதச் செயலை உணர்ந்து அதில் பற்றுக்கொண்டு செயலாற்றிப் பங்குபெற வேண்டும்" (இறைபணி 47,48) என்று வத்திக்கான் பொதுச்சங்கம் வற்புறுத்துகிறது. இது முதல்முதல் திவ்விய பூசைப்பலியின் இயல்பினுல் வேண்டப்படுகின்றது. ஏனெனில் திவ்விய பூசைப்பலி கிறிஸ்துநாதரின் பலி மட்டுமல்ல, முழுத் திருச்சபையின் பலியாகவும் இருக்கின்றது. இத் திருச்சடங்கு வழியாக கிறிஸ்துநாதர் தாம் சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியை இரத்தம் சிந்தாத முறையில் குருவின் கையால் புதுப்பித்து நீடிக்கச் செய்கிருர். அதே வேளையில் கிறிஸ்துவின் மணமகளாகிய திருச்சபை அவரைப் பரம தந்தைக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, தன்னையுமே அவரோடு சேர்த்துப் பலிப்பொருளாக ஒப்புக்கொடுக்கிறது.

அடுத்தபடியாக, இது கிறிஸ்தவ மக்கள் ஞானஸ்நானத்தின் வழியாகப் பெற்றுள்ள உரிமையும் கடமையுமாகும் (இறைபணி 14). ஏனெனில், "ஞானஸ்நானம் பெற்றவர்கள் தம் மறுபிறப்பாலும், பரிசுத்த ஆவியின் அபிசேகத்தாலும் ஞானக்கோயிலாகவும், புனித குருத்துவமாகவும் திருநிலைப்படுத்தப் பெற்றுள்ளனர்." "விசுவாசிகளின் பொதுக்குருத்துவமும், திருப்பணி அல்லது திரு ஆட்சிக் குருத்துவமும் தரத்தில் மட்டுமல்ல இயல்பிலும் வேறுபட்டுள்ளன. எனினும், அவை ஒன்றிக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையே. ஏனெனில், அவை ஒவ்வொன்றும் தத்தமக்குரிய முறையில் கிறிஸ்துவின் ஒரே குருத்துவத்தில் பங்குகொள்ளுகின்றன. திருப்பணியாற்றும் குரு தான் பெற்ற புனித அதிகாரத்தால் குருகுல மக்களை உருவாக்குகிருர், ஆளுகிருர், மறுகிறிஸ்துவாக நின்று நற்கருணைப் பலியை நிறைவேற்றுகிருர்; எல்லா மக்களின் பெயரால் இறைவனுக்கு அதை ஒப்புக்கொடுக்கிருர். விசுவாசிகளோ தம் அரச குருத்துவத்தால் நற்கருணைப் பலியை ஒன்றித்து ஒப்புக்கொடுக்கின்றனர்" (திருச்சபை 10).

திவ்விய பூசையில் தகுந்த முறையில் பங்குபற்றுவதற்கு விசுவாசிகள் உள்ளரங்க, வெளியரங்க முறைகளில் பங்குகொள்ள வேண்டும். நமது ஆன்ம ஈடேற்றத்திற்கென கிறிஸ்துநாதரால் தயாரிக்கப்பட்ட அளவில்லாத ஞானக் களஞ்சியமாகிய திவ்விய பூசைப்பலியிலிருந்து ஏராளமான ஞான நன்மைகளை அடைந்து கொள்வதற்கு அதில் பங்குகொள்ளும் விசுவாசிகள், முதல்முதல் வீண் பராக்குகளையும் சிந்தனைகளையும் நீக்கி, அவதானத்தோடும் பக்தியோடும் பிரதான குருவாகிய கிறிஸ்துவோடு நெருங்கிய முறையில் ஐக்கியப்பட்டு, அவரையும் தங்களையும், அவரோடும், அவர் வழியாகவும் இறை தந்தைக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். "கிறிஸ்து யேசுவிடம் இருந்த உள்ளஉணர்ச்சிகளே உங்களிடமும் இருக்கட்டும்" (பிலி, 2, 5) என்று புனித சின்னப்பர் கூறிய வாக்கியம் இங்கு மிகப் பொருத்தமானது. நம் திரு மீட்பர் சிலுவைப்பலியை நிறைவேற்றிய பொழுது அவருடைய உள்ளத்திலிருந்த உணர்ச்சிகளே பூசைப்பலியில் பங்குகொள்

[ 14 ம்பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன மாதா சபைகளின்

# 22வது வருடாந்த மகாநாடு.

திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன மாதா சபைகளின் 22வது மகா நாடு, கடந்த வைகாசி மாதம் 19ம் 20ம் திகதிகளில் மட்டுமாநகரில் புனித மிக்கேல் கல்லூரியில் வெற்றிகரமாக நடைபெற்றது.

திருகோணமலை, கல்முனை ஆகிய பிராந்தியங்களில் இருந்து இம் மகா நாட்டிற்கு ஏராளமான அங்கத்தவர்கள் சமுகம் அளித்திருந்தனர். பரிசுத்த ஆவியானவரின் கீதத்துடனும், மேற்றிராசன மாதா சபைத் தலைவி திருமதி. டேவிற் அவர்களின் தலைமையுரையுடனும் ஆரம்பித்த இம் மகா நாட்டில் **சமூக வாழ்க்கைக்காக ஆத்மீக ரீதியில், சமூக ரீதியில், பொருளாதார ரீதியில் பயிற்சி அளித்தல்** என்னும் மூவகை தலையங்கங்களின் கீழ் சொற்பொழிவுகளும், அதைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து மேற்றிராசன மாதா சபைகளினால் சிறந்த கலை நிகழ்ச்சி ஒன்றும் நடாத்தப்பட்டது. இவற்றுள் சகல நிகழ்ச்சிகளும் திருமறையை ஒட்டியே அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. அவற்றுள் புளியடிக்குடாப் பங்கு மாதா சபையினரின் **தியாகி** என்னும், புனித செபஸ்தியாரின் வரலாற்று நாடகம் முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது. இந்த நாடகத்தில் நடித்த நடிகர்கள் அனைவரும் தமது உணர்ச்சிமிக்க நடிப்பினால் ரசிகர்கள் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டனர். அடுத்ததாக சிறப்பான முறையில் அமைந்திருந்த நாடகம், புனித சூசையப்பர் கன்னியர் மடத்தைச் சேர்ந்த பெண்கள் மாதா சபையினரால் அரங்கேற்றப்பட்ட **ஒரு துளி** என்னும் நாடகம். இந் நாடகம் பழைய ஏற்பாட்டை பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. இந் நாடகமும் ரசிகர்களின் கவனத்தைப் பெருமளவு கவர்ந்தது என்பதில் ஐயமில்லை. மற்றும் சில நடன நிகழ்ச்சிகளுடன் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

அடுத்து, இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மந்திரமாலையின் பின், நான் பாராளுமன்றப் பிரதிநிதியானால், நான் சமூக சேவை அதிகாரியானால், நான் பங்குச் சபைத் தலைவரானால் என்னும் மூன்று விடயங்களுள் அங்கத்தவர்கள் தெரிந்தெடுத்த தலைப்பைப் பற்றி பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இப் போட்டிகள் வளர்ந்தோருக்கு வேறாகவும், பாடசாலை மாணவருக்கு வேறாகவும் நடைபெற்றன. மேற் குறிப்பிட்ட போட்டிகளில் வெற்றியீட்டி 14 புள்ளிகளைப் பெற்ற திருமலைப் பிராந்தியத்திற்கு வெற்றிக் கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது. இப் போட்டிகளில் மட்டு நகர்ப் பிராந்தியம் 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. அதைத் தொடர்ந்து வினாவிடைப் போட்டி நடைபெற்றது. சங்க ஏடுகளில் தேவதாயாரின் அத்தியாயத்தில் இருந்து இப் போட்டி வினாக்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தன. வினாவிடைப் போட்டியில் சகல மாதா சபையினரும் பங்கு பற்றினர். இதையடுத்து தீர்மானக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தீர்மானத்தில் முக்கியமாக அன்பு, நன்மை, சேவை என்பன வலியுறுத்தப்பட்டன. இறுதியாக புனித மிக்கேல் கல்லூரியில் இருந்து அனைவரும் பவனியாகப் புனித மரியநாயகி ஆலயத்துக்குச் சென்று நற்கருணை ஆசீருடன் மகாநாடு இன்பமாக முடிவு பெற்றது.

**செல்வன் க. இருதயநாதன்.**
செயலாளர்.

---

**தொண்டன் விநியோகஸ்தர்கள் கவனிக்கவும்.**

தொண்டன் விநியோகஸ்தர்கள் தொண்டனுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைப் பின்வரும் முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பிவைக்கவும். தொண்டனைத் தொடர்ந்து பிரசுரிப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது. **தொண்டன் நிர்வாகி, ஆயர் இல்லம், மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2ம் வத்திக்கான் பொதுச்சங்கமும் நம் பண்பாட்டு முறைகளும்

## (வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழா ஆரம்ப நாளன்று நிகழ்ந்த கலந்துரையாடலில் இடம்பெற்ற ஆரம்ப உரை).

நம் அன்றாட வாழ்விலேயே நானாவித மாற்றங்களை அடைந்து வரும் நாம் நமது கத்தோலிக்க சமய கருமங்களிலும், பலவித மாற்றங்களை அநுபவித்து வருகிறோம். முன்னொருபோதும் நாம் காணாத வகையில் திருவழிபாட்டில் பெரும் மாற்றம். நமது சொந்த மொழியிலேயே திருவழிபாடு; குரு நம்மை நோக்கி, நம்மையும் அணைத்தே திருப்பலி ஒப்புக்கொடுத்தல்; ஆலய அலங்காரங்களில் நிறைகுடம்; தேங்காய் நெய் விளக்கு; பிற சமய சகோதரர்களுடன் நெருங்கிய ஈடுபாடு; எனப் பல மாற்றங்களை அநுபவிக்கிறோம்.

இவற்றைக் காணும்போது இருவகை மனப்பாங்குகள் தோன்றுகின்றன. ஒன்று நாம் பிற சமயங்களுடன், சிறப்பாக சைவசமயத்துடன் கலந்து போகிறோமா? மற்றது நாமும் பிறசமய சமுதாயத்துடன் இணைந்து வாழ்ந்து நம் வாழ்வுக்கும், சமய வளர்ச்சிக்கும் வளம் அளிக்கின்றோமா என்பன. இவற்றில் எது சரி.

விஞ்ஞான, நுண்ணறிவுப் பெருக்கத்தின் காரணமாக உலக சமுதாயத்தின் ஒரு பகுதி இறை நம்பிக்கையில் தளர்ந்து உலோகாயதக் கொள்கையிற் செல்வதை நாம் அறிகிறோம். நம் பரிசுத்த தந்தை 23ம் அருளப்பரும் கண்டார். நம் கத்தோலிக்க சமுதாயம், உலக சமுதாயத்துடன் ஒன்றுபட்டு, உறவாடி வாழாது, தனித்து வாழ்வதால் திருச்சபை வளர்ச்சி பங்கப்படுவதையும் உணர்ந்தார். நம்மைப் பிரிந்து வாழும் சகோதரர்களையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதையும் உணர்ந்தார். இறைவனை வேண்டினார். தூய ஆவியின் தூண்டுதல் பெற்றார். அதன் விளைவு தான் 2ம் வத்திக்கான் சங்கம்.

திருச்சபை ஆரம்பகாலமிருந்து 20 சங்கங்கள் கூடித் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆவன செய்தன. ஏறக்குறைய நூறு ஆண்டுகளின் பின் 21வது சங்கத்தை பரி. தந்தை 23ம் அருளப்பர் கூட்டினார்.

ஏறத்தாழ 2500க்கு மேற்பட்ட அனைத்துலக ஆயர்களையும் 1962ல் வத்திக்கான் திருநகரில் கூட்டினார். 4 வருடங்களாக, தீவிர உணர்வுடனும், புனித ஆவியின் துணையுடனும், நம் திருச்சபையின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆற்றவேண்டிய சேவைகளை ஆராய்ந்து வரையறுத்தனர். அச் சேவைகள், ஆயர்களின் அரும் பணியின் கனிகள் 16 ஏடுகளாகப் பரிணமித்தன. பரி. தந்தையின் ஆசீரும், அங்கீகாரமும் பெற்று, பிரகடனம் பெற்று, நமக்கு அளிக்கப்பட்டன. ''திருச்சங்கம் முடிவுற்றது; ஆனால் திருச்சங்கம் தொடங்கியுள்ளது'' என ஒரு பெரியார் கூறியது போல, வருங்காலம் நாம் சங்க ஏவுதல்களை ஏற்று, அநுசரித்துப் பயனடைய வேண்டும்.

பரி. தந்தை நமக்களித்துள்ள நல்வரங்களில் ஒன்று ''நமது வழிபாட்டு முறைகளை, வாழ்வையே நம் நாட்டுப் பழக்க வழக்கம், கலாச்சாரம், பண்டுபாடுகட்கு அமைய மாற்றிக்கொள்ளலாம்; இதனால் நாம் ஏனைய மக்களுடன், சமுதாயத்துடன் ஒன்றித்து அனைத்துலகும் ஒரே மக்கள் என்ற வகையில் சமாதானமாய் வளர முடியும்'' என்பது.

**பொ. இராமலிங்கம்**

இதனையிட்டுச் சிறிது கூற விரும்புகிறேன்.

இது மிக உன்னதமான அரிய சந்தர்ப்பம் என்றே கருதுகிறேன். தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி நம் ஈழநாட்டு ஆயர்கள் இதற்குப் பூரண இசைவு அளித்துள்ளார்கள்.

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இளைஞர் இல்லம்

# கிறிஸ்துவத்தில் எனது பங்கு (1)

திரு. க அமலநாதன் B. Sc.

வளர்ந்து வரும் சமுதாயத்தில், புரட்சி பொங்கி வழியும் இந்தப் புது சகாப்தத்தில், இளைஞரின் பங்கு எல்லையற்றதாகும். ஏன், சுருங்கக்கூறின் இந்த உலகத்தின் ஏற்றமும் தாழ்வும் இந்த இளைஞரின் கண்ஜாடை ஒன்றில் கட்டுண்டு விடுகின்றதல்லவா? பிராஞ்சு நாட்டின் ஆட்சிபீடமே இதற்குச் சான்று பகர்கின்றது இந்தோனேஷியாவில் பல்லாண்டு ஆட்சி செலுத்திய 'சுகர்ணே' இன்று என்ன கெதியானுர்? இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சியையே மாற்றியமைத்தவர்கள் இந்த இளைஞர் சமுதாயமே என்றால் எவரும் மறுக்க முடியாது. காட்டாறு போன்று கட்டுக் கடங்காத உணர்ச்சிப் பெருக்கிடும் இளைஞர் உள்ளங்களை, ஒருமுகப்படுத்தி நிறுத்தி அதைப் பயனுள்ளதாக்கினால், நாடு நன்மை பெறும். அதோடு இளைஞன் தன்னிறைவு பெறுகிறான். எனவே, வழிகாட்டிகள் தேவை. எனது சொந்த செயலாற்றுமையைப்பற்றி நான் பல தடவைகளில் விருக்தியடைந்ததுண்டு. நான் மட்டுமல்ல என்னைப்போன்று பல தரப்பட்ட இளைஞர்கள் இதே நிலையில் ஆக்கப்பட்டுள்ளார்கள். நாம் இன்று பொறுப் புணர்ச்சியற்றவர்களாக இருக்கின்றோம். நாம் சாதாரண பொறியியல் வல்லுனர்களாகவோ, சட்டவல்லுனர்களாகவோ, அல்லது விரிவுரையாளர்களாகவோ மாறுவதற்காக ஆக்கப்பட்டவர்களல்ல, மாறாக நல்ல பலன்தரும் பாங்கான பழக்க வழக்கமுள்ள ஆண்களையும், பெண்களையும் ஆக்குபவர்களாக அனுப்பப்பட்டவர்கள். நல்ல கனி தரும் கற்பக விருட்சங்களை உலகில் நடுபவர்களாக இருப்பதற்காக ஆக்கப்பட்டவர்கள். இதை இன்னும் தெளிவாகக்கூறின்; ஆண்டவராகிய கிறிஸ்துவின் சேவைக்காக அர்ப்பணித்துக் கொள்ள அனுப்பப்பட்டவர்கள். இதுதான் நமது மதத்தின், கிறிஸ்துவமதத்தின்மேல் உனக்குள்ள கடமையாகும். இது உனக்கும் எனக்கும் மட்டுமல்ல, ஞானஸ்ஞானம் பெற்றுக்கொண்ட அத்தனை கிறிஸ்துவனுக்குமுள்ள தலையாய கடமையாகும்.

நமது மதத்தின்மேல் நமக்குரிய கடமை என்ன? இது எவ்வாறு ஆத்மீகக் கடமைகளுக்கும் இலௌகீக கடமைகளுக்கும் வேறுபட்டதாக விளங்குகின்றது. ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரித்து வேறுபாடு காண்பது மிகவும் கடினமாகும். சமயம், கடவுளிடமுள்ள நமது நெருங்கிய உறவைப் பற்றிப் பேசுகிறது. நமது சொல்லிலும், செயலிலும், சிந்தனையிலும் கடவுளின் மையத்துவம் வெளிக் கொணரப்படல்வேண்டும். விவேகமுள்ள உண்மைக் கத்தோலிக்கன் ஒருநாளில் இருபத்திநான்கு மணித்தியாலமும், கடவுளுக்குத் தன்னை அர்ப்பணிக்கத் தயக்கமற்றவனாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவனது விவேகமுள்ள செயல்கள் யாவும் அவன் மதத்தின்மேல் கொண்டுள்ள பொறுப் புணர்ச்சிகளை வெளிக்கொணரும். கிறிஸ்துவ மதம், சமூகசேவையுடன் ஒன்றித்த மதம் (Social Religion). சகல சமூகப் பொறுப் புணர்ச்சிகளும், சமயப் பொறுப்புணர்ச்சிகளாகும். படைப்பின் எழுச்சியில் காயினால் எழுப்பப்பட்ட அறைகூவலான ''நான் என் சகோதரனின் காவலாளியா?'' என்ற வினாவுக்கு நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்து நாதர் பொதுத்தீர்வை நாளைப்பற்றிய விபரணையில் மிக அழகாகப் பதில் கூறியுள்ளார். நாம் ஆண்டவரை ஏற்றுக்கொள்வது, அவருடைய பிரதியுருவங்களான, பசியால் வாடுவோர், நிர்வாணிகள், நோயாளிகள், சிறைக்கைதிகள், மற்றும் ஒதுக்கப்பட்டோர் முதலியோரை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகின்றோம் என்பதைப் பொறுத்துள்ளது. ஏனெனில் இவர்களுள் நாம் ஆண்டவரைக் காண வேண்டும். பரிசுத்த சுவிஷேசகர்கள் உவமைகளைத் தெரிந்தெடுத்து அவை மூலமாக, ''இறைவன் தனது அளப்பரிய தன்மையையும் அக்கறையையும் ஏழைகளுக்கும், தேவைப் பட்டோருக்கும் ஆண் பெண் என்ற பேதமின்றி வரையாது வழங்கி, ஆண்டவருடைய அருளுக்குத் தகுதியுடையவர்கள் என்பதைக் காட்டுகிறார்'' என்று எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். லாசர், ஜயீர் என்பவரின் மகள், சக்கேயு, மற்றும் இடது பக்கக்கள்வனின் கதைகள் இதற்குச் சான்று பகர்கின்றனவல்லவா? இவையாவும் எதற்காக? நமக்காக, இவைகளிலுள்ள சிறந்த குறிக்கோள்களை நாம் விவேகமுடன் உட்கிரகித்து, நமது மதத்தின் சமூகசேவையோடு

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கிறிஸ்துவத்தில் எனது............**

[5ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றித்த வாழ்வை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக. ஆனால், உண்மையில் இது கல்வியறிவற்ற கத்தோலிக்க சமுதாயத்தின் அறிவுக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட செயலாகும். காரணம் இதை உற்றார் உறவினரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் எடுத்துக்கூற அவர்கள் ஆற்றலற்றவர்கள்.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் வாழும் தற்காலக் கத்தோலிக்க மாணவர் சமுதாயத்துக்கு கிடைப்பதற்கரிய "அப்போஸ்தல சேவை" வாய்ப்புக் கிடைக்கின்றது. நமது நாட்டிலுள்ள கல்விக்கூடங்களிலெல்லாம் எதிர்பாராத அளவில் கத்தோலிக்கரல்லாதோர் தொகை பெருகுகின்றது. இதன் மத்தியில் ஒரு கத்தோலிக்கன், உண்மையுள்ள, மிகச் சத்திவாய்ந்த, வாழும் கத்தோலிக்கன், அவன்தான் கிறிஸ்துவின் தூதுவன். கத்தோலிக்கரல்லாதோர் கிறிஸ்துவத்தின் தன்மையை துறவிகள் மூலம் காண்பதைவிட அவன்மூலம் அதிகமாகக் காண்கின்றனர். ஏனெனில், துறவிகள் பெரும்பாலும் வேறுபட்ட சுற்றுடலின் மத்தியில் வாழ்கின்றனர். இந்த வினவுக்கு நீயாகவே விடைபகன்றுபார். நீ உன் சொல்லில், உன் செயலில், உன் உடையில், உன் கலந்துரையாடலில், உன் களியாட்டத்தில், உன் பரீட்சையில் மேலதிகாரிகள்மட்டில் உனக்குள்ள கடமைகளில், பிற மதத்தவரைவிட நீ கண்ணியமுடனிருக்கின்றாயா? உன்னால் "ஆம்" என்ற வார்த்தையைக் கூற முடியுமானால், கிறிஸ்து உன்மூலம் வெற்றியடைகிறார். அன்றேல் நீ கிறிஸ்துவை தோல்வியடையச் செய்கின்றாய். அர்ச். பிராஞ்சிஸ்கு அசிசி எவ்வளவு அழகாக மட்டுமன்றி, ஆணித்தரமாகவும் கூறிய வசனத்தை நாம் இங்கு மறந்துவிடக் கூடாது. நாங்கள் எல்லோரும் "நடமாடும் பிரசங்கங்கள் (Walking Sermons). அழகாக இருந்தாலும் சரி, அழகற்றதாக இருந்தாலும்சரி, சுகதேகியாக இருந்தாலும்சரி, நோயாளியாக இருந்தாலும்சரி, அறிவுள்ளவரோ, அறிவற்றவரோ, தகுதியுடைவரோ, தகுதியற்றவரோ, நாம் விளிப்புள்ள இவ்வுலகத்தின் கண்களுக்கு" நகரும் பிரசங்கங்கள் (Moving Sermons). (வளரும்) ★

**2ம் வத்திக்கான்...........**

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இதன்படி, நம் வீடுகளிலும், ஆலயங்களிலும் சில மாற்றங்கள் நிகழ்வதைக் காண்கிறோம். நிறை குடம் வைத்து தேம் பாளையால் அலங்கரித்து, தேங்காய் நெய் விளக்கேற்றி, சந்தன அகிற்புகை வாசனையூட்டி, சந்தனத் திலகமுமிட்டு நாம் விழாவெடுக்கும்போது, நம்முட் பலருக்கு ஒரு பெரிய சந்தேகம் தோன்றுகிறது.

இவை சைவ சமயத்தவர் வழிபாட்டு முறைகளல்லவா? என்பது.

இவ்வேளை நாம் ஆராய வேண்டிய சிறு விஷயம் ஒன்றுளது.

இவ்விழா முறைகள் தமிழருக்குரியனவா? அல்லது சைவ சமயத்துக்கே உரியனவா? நாம் பெரும்பாலும் தமிழர்; தமிழ்க்கிறீஸ்தவர்கள். தமிழ் வேறு, சைவம் வேறு, தமிழ்ச் சைவர், தமிழ்க் கிறீஸ்தவர்கள் எனப்பிரியும்.

மேற்கு நாட்டு நாகரீகம், கலை, பண்பாடு இங்கு வருமுன்பே தமிழர் கலை, பண்பாடு ஓங்கிவளர்ந்திருந்தது. தமிழர்கள் கிறீஸ்தவர்களாகி, மேனாட்டுப் போதனைகளைப் பின்பற்றத் தொடங்கியபோது, நமது சொந்த பண்பாடுகளை விட்டுவிட்டனர். இம்முறை வளர்ந்தது, மீண்டும் நாம் நம் முறைகளைப் பின்பற்றத் தொடங்கும்போது ஒருவித தயக்கம், சந்தேகம் ஏற்படுகிறது. இதனை நாம் உணர வேண்டும்.

நாம் தயக்கமின்றி, சந்தேகமின்றி இவற்றை ஏற்று, அநுசரிக்கவேண்டும். நம் அயல், தமிழ்ச் சைவச் சகோதரர்கள் இவற்றைக் காணும்போது, அவர்களுடன் நாம் கலந்து கொள்ளும்போது நம் சமுதாயத்துள் ஏற்படக்கூடிய சௌஜன்ய உறவைச் சற்று மனக் கண்ணால் பாருங்கள். இந்த உறவு நம் சமய உண்மைகளை மற்றவர் அறிய உதவுகிறது. பயன் நம் சமய வளர்ச்சி.

"என்றும் இளமை குன்றாத நம் திருச்சபையின் அருஞ் செல்வங்கள் யாவற்றையும் எல்லா மக்களும் அடைய வழி செய்ய வேண்டும்" என விழைந்தார் பரிசுத்த தந்தை.

2ம் வத்திக்கான் சங்கம் நமக்களித்த நல் வழிகளைப் பிசகாமல் பின்பற்றி, திருச்சபையின் தனித் தலைவர் கிறீஸ்துவின் அபிலாசைகள் நிறைவேற நாம் முயல வேண்டும். இது நாம் இயற்றும் இறை பணி. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜெயம் அளிக்கும்

# மன்னிப்பு (6)

## (தொடர் கதை)

-★-

ஏதிலும் முன் எச்சரிக்கையாக இருப்பவன் நான். இந்த பெண் விஷயத்தில் இப்படி ஏன் ஈடுபடுகிறேன்? என்னையறியாமல் ஏதோ ஒரு பாச உணர்வு என்னை நுழைத்துவிட்டது. எப்படியும் இதற்கொரு முடிவு காண்பது என்று துணிவுடன் எதிர்த்து நின்றேன். போற்றுகிறவர் போற்றட்டும் தூற்றுகிறவர் தூற்றட்டும். இதற்கேற்ப தலைமையாசிரியரும் தகுந்த புத்திமதிகளைச் சரியான சந்தர்ப்பங்களில் கூறி என்னைத் திடப்படுத்தினார். ஊரிலிருந்து கொண்டுவந்த எற்வேட்டின் விலாசத்தை சின்னத்தம்பியரிடம் காட்டியபோது பெரிய திரவியம் கிடைத்ததுபோல மகிழ்ச்சியடைந்தார். நீண்ட இடைவெளிக்குப்பின் அன்று அவர் முகம் மலர்ந்திருந்தது. எனக்கும் எனது முயற்சி புத்துணர்ச்சியைக் கொடுத்தது. ஆனால், இந்த மகிழ்ச்சியும், உற்சாகமும் அதிக நாட்கள் நீடித்திருக்கவில்லை. அவனுக்குப் பல கடிதங்கள் எழுதியும் பதில் வராததினால் சின்னத்தம்பியர் இடிந்துபோனார். தான் போய் அந்த ஊரில் பார்த்து வருவதாகக் கூறினார். ஏற்கனவே நொந்துபோய் இருப்பவர், தாமடைந்த ஏமாற்றத்தினாலும், அவமானத்தினாலும் அவனைக்கண்டவுடன் கோபமடைந்து விபரீதம் ஏதாவது ஏற்பட்டால் என்ன செய்வது? என்று எண்ணி அவரைத் தடுத்துவிட்டேன். ஆனால் இவற்றைக் காரணம் காட்டாமல், ''கடிதத்துக்குப் பதில் எழுதாதவன், உங்களைக் கண்டாலும் ஒளிந்துகொள்வான். திசை தெரியாத ஊரில் நீங்களும் கஷ்டப்பட நேரும். இதனால் வீண் பொருள் விரயமும் மனமவருத்தமும் தான் மிஞ்சும்,'' என்று சொல்லி அவரைத் சமாதானம் செய்துவிட்டேன். ஊரில் நான் நின்ற நாட்களில் எற்வேட் வீட்டுப் பக்கம் போகவில்லை. அவனைப்பற்றி எதாவது கேட்டால் ஆத்திரத்தில் நடந்தவற்றையும் உளறிவிடுவேன். இதை ஏன் முன்பே எங்களிடம் நீயாவது சொல்லவில்லை என்று என் மீது திருப்பிப்பிடிப்பார்கள். அப்படி அறிந்தாலும் இருவரையும் சந்தோஷமாகச் சேர்த்து வைப்பார்களா? நடக்கவே நடக்காது. மேலும் பிரச்சினைகள் உண்டாகாமலிருக்க அவன் வீட்டுப் பக்கம் போகாமல் விட்டுவிட்டேன். எப்படியாவது அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்ற இலட்சியத்துடன், வேறு வழியில் அவனது விலாசத்தைப் பெற்றுக்கொண்டேன். சின்னத்தம்பியர் வீட்டையடைந்ததும் ''அவரைக் கண்டீங்களா மாஸ்டர்''? என்று ஓடி வந்தாள் கண்மணி. என்ன பதில் சொல்வேன். முகத்தைத் திருப்பிக் கொண்டேன். விம்மல் ஒலி எனதருகில் கேட்டது. பிறகு சற்றுத் தூரத்தில் கேட்டது. 'ஐயோ கடவுளே ஏனிந்தப் பெண்ணுக்கு இப்படியொரு வாழ்வு?' அவன் இத்தனை செய்தும், அவன் மீதுள்ள வாஞ்சை குறையவில்லையே. பாவம் எற்வேட் இதை அனுபவிக்கக் கொடுத்து வைக்கல்ல.'' சின்னத்தம்பியரின் பெருமூச்சு என் சிந்தனையைத் தடை செய்தது. கண்மணியின் விம்மல் ஒலி இன்னும் கேட்டுக்கொண்டிருந்தது. காலமும் கரைந்து சென்றது. கண்மணியின் பேறுகாலமும் வந்தது. உடம்பைச் சரிவரக் கவனியாததினால் மிகவும் பெலயீனப்பட்டிருந்தாள். சோதனை செய்த டாக்டர் ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் மிகக் கஷ்டமாக இருக்கும் என்றும் கூறினார். இதற்குக் கண்மணி முதலில் சம்மதிக்கவில்லை. தலைமையாசிரியரும் அன்று எங்களுடனிருந்ததால், அரை மனதுடன் சம்மதித்தாள். இந்தக் கட்டத்திலாவது மரணம் வராதா? என்று கண்மணி ஏங்கினாள். இதையறிந்து ''சாவது மிக இலகு. ஆனால் உனக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தை அடைந்து, ஒருநாளைக்காவது அவனுடன் சீவித்துவிட்டால் உன் மேல் மற்றவர்கள் சொல்லும் பழி போய்விடும். இதைத் துடைக்காமல் பயந்து செத்தால் நீ ஒரு கோழை. உனது சந்ததிக்கும் இந்தப் பழி தொடரும். எனவே மனதை தைரியப்படுத்தி சொல்வதைக் கேள்,'' என்று பல புத்திமதிகளைச் சொன்னேன்.

கிராமத்திலுள்ளவர்களுக்கு பட்டணத்து ஆஸ்பத்திரிக்குப் போய் வருவது பெரிய வேலை தானே! அதற்காக நானும் என்னாலான மட்டும் உதவி செய்தேன். ஆஸ்பத்திரியில் விலாசம் கேட்டபோது எனது விலாசத்தைக் கொடுத்து, மற்றும் சில அறிமுகமானவர்களிடம் கவனித்துக்கொள்ளும்படியும் கூறியிருந்தேன். குமரன் சாப்பாடு கொண்டு போவான். பகல்ச் சாப்பாடும் இரவுச் சாப்பாடும் கொண்டு வருவதால் அவனுக்குப் பள்ளிக்கூடம் போக முடியவில்லை. சின்னத்தம்பியருக்கும் தினமும் வரப்போக உடல் நிலை சரியில்லை. கண்மணியின் கதி அவரை

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மன்னிப்பு..............**

[7ம் பக்கத் தொடர்ச்சி]

நோயாளியாக்கிவிட்டது. இந்த நிலையில் நடு இரவில் என்னைத் தந்திச் சேவகன் எழுப்பியதும், என்னமோ ஏதோ என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடினேன். துன்பம் வந்தால் அது கொஞ்சத்தூரம் தொடர்ந்து வரும் போலும். பதறும் கைகளால், படபடக்கும் நெஞ்சுடன் தந்தியைப் பிரித்தேன். மனம் பலதையும் எண்ணிப் பரிதவித்தது. 'கண்மணிக்குக் கடுமை உடன் வரவும்'' எனத் தந்தியிலிருந்தது. அவசரம் அவசரமாக ஆஸ்பத்திரிக்கு ஓடினேன் அங்கே கண்மணி கண் மூடிக்கிடந்தாள். எனக்கு அவளைப் பார்த்ததும் பகீரென்றது. டாக்டரை விசாரித்தேன் மிகப்பெலயீனமாக இருக்கிறபடியால் இரத்தம் கொடுக்கவேண்டும். இரத்தம்கொடுக்கக்கூடிய ஒருவர் வேண்டும் என்றார். எனது இரத்தத்தைச் சோதித்து சரியாக இருந்தால் கொடுக்கும்படி சொன்னேன். என்னை உள்ளறைக்கு அழைத்துச் சென்றனர். ஒரு மணி நேரத்தில் எல்லாம் முடிந்தது. மீண்டும் காத்திருந்தேன். எங்கோ பிறந்து வளர்ந்த எவளோ ஒருத்திக்காக நான் இரத்ததானம் செய்வதை எண்ணி வியந்தேன். கடவுளின் சித்தம் எப்படியெல்லாம், ஒன்றுக்கொன்று அனுசரணையாக அமைந்திருக்கிறது. கண்மணியின் குடும்பத்துக்கு நான் அறிமுகமாகாவிடின் இந்தக்கஷ்டத்தில் அவள் கதி என்ன? இவையெல்லாம் முன்னறிந்துதான் 'கர்த்தர் உலகைக் காக்காவிடில் அதைக் காப்பவன் கண் விழிப்பது வியர்த்தம்' என்றுகூறினரோ? ''யேசுவே, இந்தப் பெண் உயிர் பிழைக்கத் தயை கூர்ந்தருளும்,'' என மன்றாடினேன். டாக்டர் வந்தார் அவருடைய பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தேன். 'பூரண ஓய்வு வேண்டும் நன்றாகத் தூங்கட்டும் இனிப் பயமில்லை' என்றதும், எனக்கு ''அப்பாடா'' என்றிருந்தது. காலையில் சின்னத்தம்பியர் செய்தி கேட்டுத் துடித்துவிட்டார். என்னை மனமார வாழ்த்தினர். உடனே ஆஸ்பத்திரிக்குப்போக விரைந்தார்.

உலகில் இன்ப துன்பம் சுழல் சக்கரம். அதுபோல் துன்பம் மட்டுமே என்றும் மனிதனுக்கு இருந்துவிடுவதில்லை. அப்படி இருந்தால் மனிதன் தாங்கிக் கொள்ளமாட்டான் என்றுதானே என்னவோ ஆண்டவன் இடையிடையே இன்பங்களையும் கொடுத்திருக்கிறார். அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்தபோது எனக்கு இப்படியான பல எண்ணங்கள் தோன்றின. பிஞ்சுக்காலும் கையும், தந்தையின் முகச் சாயலைக் கொண்ட ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தாள் கண்மணி. அவளும் உலகுக்கு ஒரு புது உயிரை வழங்கிய பெருமிதத்தாலும், தாய்மையின் பூரண பொலிவாலும் மிக அழகாகத் தோன்றினள். அவளது கவலைகளையும் சற்று மறந்திருந்தாள். சின்னத்தம்பியர்கூட தானும் ஒரு குழந்தையாகிவிட்டார். கவலைகள் ஒருபுற மிருக்க தன்னையறியாமல் மகிழ்ச்சிக் கூத்தாடினர். குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் வீட்டிற்கு வந்து விட்டார்கள். இதனல் வீட்டிலும் கலகலப்பேற்பட்டது. நாளடைவில் கண்மணி எற்வேட்டைப் பற்றி மறந்து விட்டாள் என்று கூடச் சொல்லலாம். குழந்தையைப் பேணி வளர்ப்பதில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தியதால், மற்றக்கவலைகளை மறந்திருந்தாள்.

எனக்கும் அவன் வருவானென்ற நம்பிக்கையும் போய்விட்டது. அவனைப் பற்றி வெறுப்பேற்பட்டது. எனவே அவளுக்கு குழந்தையை ஒழுங்காக வளர்த்துப் பெரியவனாக்க வேண்டும். வருவாய்க்கு உனது நிலபுலன்கள் போதும், நாங்களும் தக்க வழிகளைக் கூறுகிறோம். எனவே நடந்ததை மறந்து உனது பிள்ளையை நல்வழிப்படுத்து என்று புத்திமதி கூறினேன்.

நீண்ட நாட்களுக்குப் பின் அன்றிரவு நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. சோவென்ற மழைச் சத்தத்தைத் தவிர வேறெதுவும் கேட்கவுமில்லை. வெளியே ஏதும் தெரியவுமில்லை. எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. இது எனது மனதுக்கு இனம் புரியாத கலக்கத்தைக் கொடுத்தது. இப்படியான ஒரு இரவில் முன்னொருநாள் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் பயங்கரக் கொலை யொன்று நடந்தது. இந்த நிலையில் எனக்கு அது ஞாபகம் வந்தது. ஏதோ ஒரு துக்கமான சம்பவம் நடக்கப் போகிறது என நெஞ்சு படபடத்து அடித்துக்கொண்டது. நமது குடும்பத்தில் ஒருவர் அல்லது நாம் மிகவும் அன்பாக இருப்பவர்கள் மரணிக்குமுன் இப்படி மனம் கலங்கியிருக்கும், அந்தப் பயங்கர இரவில் சின்னத்தம்பியரின் உயிர் பிரிந்ததுதான் எனது கலக்கத்துக்குக் காரணம். காலையில் அங்கு சென்றபோது கண்மணியின் அவலக்குரல் இதை எனக்கறிவித்தது.

''பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்பது போல, சின்னத் தம்பியரின் மரணம் பல சிதைவுகளை ஏற்படுத்தி விட்டது. வழக்கமாக வயல் காட்டுப் பக்கம்

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மன்னிப்பு................**

[8ம் பக்கத் தொடர்ச்சி]

சென்று வந்தவர். அன்றொருநாள் சுகமில்லை என்று படுத்தார். தொடர்ந்து மூன்று நாட்களாகக் காய்ச்சல், வாய்பிதற்றிக் கொண்டேயிருந்தார். ''கண்மணி, கண்மணி, மகளே, மகளே'' என தனது மகளின் நினைவாகவே இருந்தார். தான் கிளிபோல வளர்த்த பிள்ளைக்கு ஏற்பட்ட நிர்க்கதியை எண்ணி வருந்தி நடைப்பிணமாக இருந்தவரை, மூன்று நாட் காய்ச்சல் நிஜப் பிணமாக்கி விட்டது. இந்தத் துயரத்தினுல் அதிகம் பாதிக்கப்பட்டவள் கண்மணி. தனக்குத் துணையென இந்த உலகிலிருந்த ஒரே ஒரு ஆன்மாவும் பிரிந்து விட்டது. அழுவதை மறந்து பிரமை பிடித்தவள் போலிருந்தாள். அனுபவிக்க இனித் துன்பமுமில்லை. அழுவதற்குக் கண்ணீருமில்லை. துக்கம் விசாரிக்க வந்தவர்களும் சின்னத்தம்பியருக்காக அதிகம் அழவில்லை. கண்மணியின் நிர்க்கதிக்காகவே அதிகம் அழுதனர். ஆனுல் இவர்களின் கண்ணீரை நான் என்றும் மதிக்கவில்லை. அகம் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் சந்தர்ப்பவாதிகள். இதை சின்னத்தம்பியர் இறந்த சில மாதங்களில் நிரூபித்து விட்டனர். கண்மணியின் தந்தைக்கு மறுமணம் செய்து வைத்ததுபோல, மகளுக்கும் செய்ய முன்வந்தனர், இந்தப் பரோபகாரிகள். ஆனுல் கண்மணி பிடிவாதமாக மறுத்து விட்டாள். ''கணவன் உயிருடன் இருக்கும் பொழுது, மாற்றுனைக் கைப்பிடிப்பதா'' என்ருள்' அவர்களும் விடவில்லை. ''உயிருடனிருந்தால் வந்திருப்பானே, குழந்தையைப் பார்க்க வாகிலும் வந்திருப்பானே'' என்றனர். கண்மணிக்குத் தன் தனிமையைக் கொண்டு தானே இவர்கள் இவ்வாறு பேசுகின்றனர். கடவுளே இதற்கொரு முடிவில்லையா? என வருந்திஞள். அவர்களும் ''அப்பிடி விருப்பமில்லாவிட்டால் வழக்குப் போட்டு அவனை விலக்கிவிடு, உனக்கு அவன் பணம் கட்ட வேண்டிவரும் என்றனர் இவர்களின் தொல்லையால் ''அவரும் வேண்டாம், பணமும் வேண்டாம்'' எனக் கோபமாகக் கூறிவிட்டாள். இதனுல் அவர்கள் மேலும் மேலும் பல பொய்வதந்திகளைப் பரப்பினுர்கள். ''மாஸ்டர் இருக்கும்போது இதுவும் சொல்லுவாள், இன்னமும் சொல்லுவாள்'' என்ற வதந்திகளை நான் முதலில் நம்பவில்லை. கண்மணியே என்னிடம் வாய்விட்டுக் கதறிய போது, பொல்லாத உலகில் நல்லவர்கள் சீவிப்பது மிகக் கஷ்டம் என்பதைத் தெரிந்து கொண்டேன். ''கண்மணி அழாதேயம்மா கடவுளிருக்கிருர். நமது மனம் சுத்தமாக இருந்தால் அதுவே போதும்'' என்று அவள் சமாதானமடையக் கூடிய வகையில் பல ஆறுதல் சொன்னேன். அவளுக்கு அப்படி ஆறுதல் சொல்லி விட்டு வந்தாலும் என்மனம் அமைதி பெறவேயில்லை. கண்மணிக்கு இப்படியான துன்பங்களைக் கொடுக்கும்படி தூண்டியது அவளது சின்னம்மாதான். தனது இனத்தவர் ஒருவருக்கு அவளைக் கட்டி வைத்தால், தனது எண்ணப்படி சொத்து முழுவதையும் அனுபவிக்கலாம். சொந்தக்காரனில்லாத பிறத்தியான் வந்தால் தொல்லைதானே. ''நான் தனியே எத்தனை நாளைக்கு இப்படி கஷ்டப்படுவது? எனக்கும் வயசாகி விட்டது. எல்லாருக்கும் சமைத்துத் தட்டெடுக்க முடியுமா? என்று கண்ணீர் விட்டாள். அவளைப் போன்ற சிலர் இந்தக்கதைகளை நம்பி கண்மணிக்குப் பல தொல்லைகள் செய்தனர். அவர்கள் என்ன செய்தாலும் அனுபவித்து பழக்கப்பட்ட கண்மணி, துணிவு பெற்று, பேதமை மறைந்து வீரப் பெண்ணுக நின்று சவால் விட்டாள். கண்மணியின் இந்தத் தோற்றம் சங்க காலத்துக் கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்டு நின்றதை நினைவூட்டியது.

(வளரும்) ★


## தொண்டன்

| | |
|---|---|
| வருட சந்தா (தபாற் செலவு உட்பட) | 4-00 |
| 6 மாதங்களுக்கு (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி ( ,, ,, ,, ) | -30 |

**விளம்பர விகிதம்**

(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 3 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 4 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 40/- |
| 8 × 6 | ,, | ரூ. 50/- |
| 9 × 7 | ,, | ரூ. 60/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொண்டன் நிர்வாகி,**
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்ருேர் மன்றம்

## கத்தோலிக்க திருமணத்தின் மாண்பு.

"திரு"

ஒரு வகையில் குடும்பம் மனிதனின் வாழ்வை வளமாக்கும் ஒரு பள்ளியாகும். ஆனுல்! அதன் வாழ்வும் பணியும் முழு மலர்ச்சி பெற வேண்டுமானுல், அன்போடு கூடிய மனஒன்றிப்பும், மணமக்களின் கூட்டு ஆலோசனையும். குழந்தைகளின் வளர்ப்பில் பெற்ருேரின் கருத்தான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன. குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தந்தை பிள்ளைகளுடன் வாழ்தல் மிகவும் அவசியம். ஆனுல், குழந்தைகளுக்கு, முக்கியமாகச் சிறுவயதினருக்கு, வீட்டில் தங்கியிருக்கும் தாயின் அரவணைப்புத் தேவை. தாயின் இந்த வீட்டுப்பணி பாதுகாக்கப்பட வேண்டும், எனினும், பெண்ணுக்குரிய சமூக முன்னேற்றத்தைப் புறக்கணிக்கக் கூடாது.

வேலைசெய்யும் பெரும்பாலான தாய்மார் குடும்பத்தின் பிரச்சினைகளாக இருக்கின்றனர். பொதுவாக, பொருளாதாரச் சுதந்திரமும், பிள்ளைகளின் வளர்ப்பில் நேரமின்மையும், குடும்பப் பிளவுகளை ஏற்படுத்துகின்றன. அதிகமாக நம் நாட்டுப் பெற்ருேர்களுக்கு பிள்ளைகளுக்கு உயிர் அளிக்கத் தெரிகிறதே தவிர, அளித்த உயிரை உருவாக்கி, நல்ல முடிவிற்குக் கொண்டுவரத் தெரிவதில்லை.

திருமணமும், திருமண அன்பும் தம் இயல்பாலே பிள்ளைகளைப்பெற்று வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. திருமண ஒப்பந்தத்தின்படி, ஆணும், பெண்ணும், ''இனி இருவர் அல்லர், ஒரே உடல்'', இருவரும் நெருங்கி இணைந்து, செயல்களிலும் ஒன்றிப்பதால் ஒருவருக்கொருவர் உதவியும் ஊழியமும் செய்கின்றனர். தங்கள் ஒன்றிப்பை உணர்கின்றனர். நாளுக்கு நாள் அவ்வுணர்வில் வளர்கின்றனர். ஒருவருக்கொருவர் தங்களையே கொடையாக அளித்தலே இந்த நெருங்கிய ஒன்றிப்பு. எனவே, இவ்வொன்றிப்பும் குழந்தைகளின் நலனுமே முழுப் பிரமாணிக்கத்திற்கும் பிரிக்கமுடியாத ஒன்றிப்புக்கும் காரணமாய் உள்ளன. திருமணம் என்கிற அருட்சாதனம் மூலம் கிறிஸ்து, மணமக்களைச், சந்திக்க வருகின்ருர். இதனுல் உண்மைத் திருமண அன்பு பரம அன்புடன் ஒன்றிக்கின்றது. தெய்வீக அருளால் திருமண அன்பு மனித அம்சங்களையும் தெய்வீக அம்சங்களையும் ஒன்ருக இணைத்து மணமக்கள் தம்மையே அன்பிலும் செயலிலும் ஒருவருக்கொருவர் சுதந்திரமாகக் கையளிக்க அவர்களை இட்டுச் செல்கிறது. அவர்கள் வாழ்க்கை முழுவதிலுமே அது பரவியிருக்கின்றது. மேலும் அது தாராளமாக இயங்குவதால் வளர்ந்து, நிறைவு பெறுகிறது. வெறும் சிற்றின்ப உணர்ச்சியிலிருந்து இவ்வன்பு மிகவும் வேறுபட்டது. தன்னலத்துடன் தேடப்பெறும் சிற்றின்ப உணர்ச்சி மிக விரைவிலும், பரிதாபத்திற்குரிய முறையிலும் மறைந்து போகும். ஆகையால், மணமக்களைத் தூய்மையான முறையில் ஒன்றிக்கச் செய்யும் செயல்கள் நேர்மையானவை, மாண்புபெற்றவை. குடும்பமே சமுதாயத்தின் அடித்தளமாக விளங்குகிறது. அதில் பல தலைமுறைகள் ஒன்றுகூடி ஞானத்தை அதிகமாகப் பெறவும், மனிதனின் உரிமைகளைச் சமூக வாழ்வின் மற்றத் தேவைகளோடு பொருந்தச் செய்யவும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்கின்றனர். எனவே சமூகங்களிலும் குழுக்களிலும் செல்வாக்குள்ள யாவரும் திருமணம், குடும்பம், ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகத் திறமையுடன் உழைக்க வேண்டும்.

குடிமக்களின் அதிகாரிகள் திருமணத்தினுடையவும் குடும்பத்தினுடையவும் உண்மை இயல்பை ஏற்றுக்கொண்டு, அதைக் காத்து முன்னேற்றுவதையும் பொது ஒழுக்கத்தைக் காப்பதையும், தங்களது புனித கடமையாகக் கருதவேண்டும். பிள்ளைகளைப் பெற்றெடுத்துக் குடும்பத்திலேயே வளர்க்கும் பெற்ருேரின் உரிமையைப் பாதுகாக்கவேண்டும். துர்அதிஷ்டவசமாகக் குடும்ப நலன்களைப் பெற இயலாத குழந்தைகளுக்கு ஆதரவான

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செல்வந்தரின் செல்லப்பிள்ளை

## மூதூர் N. C. அருள்வரதன்.

ஒரு கணம் தலையை அசைத்தால் மட்டும் போதும்; ஊரே திரண்டுவிடும். அவ்வளவு செல்வத்தினால் செல்வாக்குப் படைத்தவராக இருந்தார் செவ்வராஜ். அவரது வீட்டில் வேலை செய்கின்ற கூலியாட்கள் எத்தனைபேர்; கார்களுக்கு டிரைவராகப் பணிபுரிகின்றவர்கள் எத்தனைபேர்! இத்தனைபெரிய சொத்துக்கள் இருந்தும் அத்தனையையும் அனுபவிக்காமல் தன்னையும் தன் மகன் விக்ரரையும் விட்டுப் பிரிந்து சென்ற தன் அன்பு மனைவியை எண்ணி மிக வியாகுலம் அடைந்தவராய் இருந்தார் செல்வராஜ்.

**விக்ரர்** அங்குள்ள பாடசாலை யொன்றில் கல்வி பயின்றுவந்தான். சொத்துப்பத்து உள்ளவன் என்பதை சொல்லாமலே அறியும் அளவிற்கு கலாதியாகவே பாடசாலைக்குச் செல்வான். நேரத்திற்கு நேரம் உடைகளை மாற்றிக் கொள்வான். நாளாந்தம் கைநிறையக் காசு கொணர்ந்து மாணவர்களுடன் சேர்ந்து செலவு செய்வான். பாடசாலை முடிந்ததும் அவனுக்காகக் ''கார்'' காத்துக் கொண்டு நிற்கும். செல்வந்தர் வீட்டுச் செல்லப்பிள்ளை நடந்து செல்ல மாட்டார் போலும்!

விக்ரருடன் ஒரே வகுப்பில் படிக்கிறான் குமார்: பாவம்; அன்றாட உணவிற்கே அவதியுறுகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்கு மூன்று வயது நடக்கின்றபோதே அவனுடைய தந்தை இறந்து விட்டார். பின்னர் தாயாரின் பராமரிப்பிலேயே இன்றுடன் பதினைந்து வருடங்கள் கழித்துவிட்டான். பாடசாலைக்குச் செல்லுமுன் தாயார் செய்து கொடுக்கும் அப்பங்களை தெருத் தெருவாகச் சென்று விற்றுவிட்டு, கிடைக்கும் பணத்தை தாயிடம் ஒப்படைத்துவிட்டுத் தானும் ஏதோ இருப்பதை உண்டுவிட்டுப் பாடசாலைக்குச் செல்வான்.

பாடசாலையில் பாடங்களில் மிகவும் கவனம் செலுத்தி, ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி மரியாதையாக நடந்து வந்தான். இதனால் குமாருடன் ஆசிரியர்களுக்கு நன்னம்பிக்கையிருந்தது.

விக்ரரைப் பொறுத்தவரையில் அவன் பாடங்களில் கவனம் செலுத்துவதுமில்லை புத்திமதி ஏதும் சொன்னாலும் அதுவும் அவன் செவிகளில் நுழைவதில்லை. அவனது நடத்தை மிகவும் கேவலமானதாகவே இருந்தது. இதையறிந்த செல்வராஜ் வெளியிடத்தில் படிப்பதற்காக அனுப்பிவைத்தார்.

இம்முறை நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு குமார் உட்பட பணிரெண்டு பேர் தோற்றினார்கள். அவர்களுள் குமார் மிகவும் திறமையாகச் சித்தியடைந்திருந்தான்.

செல்வராஜோ மகன் படிக்கின்றான், பெரிய அரசாங்க உத்தியோகம் வகிப்பான் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார். ஆனால் பட்டணத்திற்குப் படிக்கச் சென்ற விக்ரருக்குப் பட்டணத்து நண்பர்கள் பலர் அறிமுகமானார்கள். பட்டணத்து நண்பர்கள் என்றால் கேட்கவாவேண்டும்! நாளாந்தம் ''பியர்க்கடை'' சிகரெட்கடை என்பவைகளைத் தரிசித்து வந்தார்கள்.

சிகரெட்டையும், பியரையும் பாவித்து வந்த விக்ரர், இப்பொழுது எல்லாவிதமான குடிவகைகளையும் அருந்துமளவிற்கு முன்னேறியுள்ளான். இவ்விடையம் எப்படியோ அவனது தந்தை செல்வராஜின் காதுகளில் எட்டிவிட்டது. அதுதான் அவர்கேட்ட கடைசிச் செய்தியாகவும் ஆகிவிட்டது. இப்பொழுது, விக்ரர்: யாருமற்ற அனாதை! ஆனால், அவன் இப்பொழுதும் தன் நிலையை உணரவில்லை. பட்டணத்துச் சீவியத்தை விட்டுப் பிரிய மனமில்லாது; தனது தந்தையின் காரியதரிசியிடமிருந்து கட்டுக் கட்டாகப் பணத்தை வரவழைத்து தவறான வழியில் செலவு செய்து கொண்டிருந்தான். உலக வழக்கம் தெரியாத விக்ரரிடமிருந்து காரியதரிசி சொத்துக்களையெல்லாம் சூறையாடிக்கொண்டான். கட்டுக் கட்டாகப் பணம் வைத்திருந்து செலவு செய்த விக்ரருக்கு இப்பொழுது ஐந்து சதத்திற்குக் கூட வழியில்லை. கையில் பணமில்லாததால்

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறை அறிவு மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேஷம்.

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

### 3. (ஆ) வனாந்திரத்தில் இயேசுவின் சோதனை

இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டாரென்று மாற்கு மிகவும் சுருக்கமாகக் கூறிமுடிக்கின்றார். இதைப்பற்றி, மத்தேயு, லூக்காஸ், விபரமாக கூறுவதில், வேற்றுமையைப் பார்க்கிலும், ஒற்றுமைதான் அதிகமாகக் காணப்படுகின்றது. 'வனாந்தரம்' என்னுமிந்த வார்த்தை வேதாகமத்திலும், சமய நூல்களிலும், விசேசமான இரண்டு கருத்துகளுடன் வருகின்றது. ஒன்று: அசுத்த ஆவியுடன் போர் பொருதும் தனிமையான ஓர் இடம். மற்றது: தனிமையில் கடவுளுடன் அளவளாவும் ஓர் இடம். உதாரணமாக: வனாந்தரத்தில் மோசேஸ் கடவுளுடன் பேசினார், என்று யாத்திராகமத்தில் கூறப்படுகின்றது. வாக்குப்பண்ணப்பட்ட நாட்டை வந்தடையுமுன், வனாந்தரத்தில், இஸ்ராயேல் மக்கள், கடவுளையும், அவரின் நன்மையையும் அனுபவித்தார்கள். கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள், கடலைக் கடந்த பின்பு, வனாந்தரத்தில், நாற்பது வருடங்கள் சோதிக்கப்பட்டார்கள்.

ஞானஸ்நானத்துக்கும் சோதனைக்கும் மிகவும் நெங்கிய தொடர்பு இருக்கின்றது. இயேசுவும், ஞானஸ்நானம் பெற்ற பின்பு, வனாந்தரத்தில், சோதிக்கப்பட்டார். இஸ்ராயேல் மக்கள் வாக்குப்பண்ணப்பட்ட நாட்டிற்குள் செல்லுமுன்பு, வனாந்தரத்தில், சோதிக்கப்பட்டது போன்று, இயேசுவும், இரட்சணியம் என்னும் புதுப் படைப்பை அடைந்து கொடுக்குமுன்பு, வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டார். பொதுவாக, சோதனைகள் இரண்டு கோணங்களிலிருந்து வருகின்றன. ஒன்று: கடவுளிடமிருந்து. மற்றது: சாத்தானிடமிருந்து. கடவுளிடமிருந்து வரும் சோதனை, மக்களைச் சுத்திகரித்து, புதுப்பிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. சாத்தானிடமிருந்து வரும் சோதனை, மக்களை கெடுப்பதற்கும், தவறான வழியில் அவர்களைத் திருப்பி விடுவதற்கும் காரணமாக இருக்கின்றது.

மக்கள் எதிர்ப்பார்த்திருக்கும் மெசியா தானே என்பது இயேசுவுக்கு நன்கு தெரியும். ஆனால் இந்த மெசியா எப்படிப்பட்ட ஒருவராக இருக்கவேண்டுமென்பதுதான், அவர் மனதில் எழுந்த பெரும் கேள்வி. வரவிருக்கும் மெசியா எப்படிப்பட்ட ஒருவராக இருக்க வேண்டுமென்பதுபற்றி, மக்கள் மனதில் பற்பல அபிப்பிராயங்களிருந்தன. இந்த அபிப்பிராயங்கள், மக்களின் அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை நிலையைப் பொறுத்ததாகவே அமைந்திருந்தன. மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மெசியா, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒருவராகவே இருத்தல் வேண்டும். இவற்றைப் பற்றி ஆழமாகச் சிந்தித்த இயேசுவிற்கு எழுந்த சோதனைகள், வேதாகம மேற்கோள்களை அடிப்படயையாகக் கொண்டே அமைகின்றன. சாத்தானுக்கும் வேதாகமம் நன்றாகத் தெரியும். சோதனைகளின் பொழுது, அவற்றிற்கு மறுமொழியும், இயேசுவிடமிருந்து, வேதாகமத்தைத் தழுவியதாகவே வருகின்றன.

வனாந்தரத்தில், இயேசுவுக்கு, நடந்த சோதனை, வனாந்தரத்தில், இஸ்ராயேல் மக்களுக்கு, நாற்பது வருடங்கள் நடந்த சோதனையை நினைவூட்டுகின்றது. சோதனையின் போது, உபாகமத்தின் மேற்கோள்களைக் கொண்டு, இயேசு, பதில் கொடுத்திருக்கிறார். இந்த மேற்கோள்கள், முதன்முதலில், இஸ்ராயேல் மக்களுக்குக் கூறப்பட்டவைகளே.

இயேசுவின் சோதனைபற்றி, லூக்காஸ் சுவிசேசத்தில் கூறப்பட்டதற்கும், மத்தேயு சுவிசேசத்தில் கூறப்பட்டதற்கும், ஒழுங்கு முறையில், சிறிது வித்தியாசமிருக்கின்றது. இருவரிலும் மத்தேயு எழுதியதே பழமை வாய்ந்தது. முதலிரண்டு சோதனைகளையும் வனாந்தரத்தில் வைக்கும் முகமாகவும், கடைசியை ஜெருசலேமில் வைப்பதற்காகவும், லூக்காஸ், சிலசமயம், ஒழுங்கு முறையை மாற்றி அமைத்திருக்களாம்.

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்.

## முக்கிய அறிவித்தல்

**பிராந்திய ரீதியில் செய்யவேண்டிய கருமங்கள் :—**

(அ) பொது நிலையினர் அப்போஸ்தலப் பணியின் பிராந்திய சபைகள் :—

1. வருடாந்த அறிக்கையைப் புரட்டாசி 10க்குமுன் பிராந்திய சபைக்கு அனுப்பவேண்டும்.
2. புது உத்தியோகஸ்தர்களின் பெயர்களைப் பிராந்திய அத்தியட்சகருக்குப் புரட்டாசி 15க்கு முன் அறிவிக்க வேண்டும். (உபவிதி 5)

(ஆ) பிராந்திய சபைகள் :—

1. வேலை வருடம் ஐப்பசி 1ல் ஆரம்பமாகி அடுத்த வருடம் புரட்டாசி 30ல் முடிவடையும். (உபவிதி 4)
2. செலுத்தவேண்டிய கட்டணத்தைப் புரட்டாசி 30க்கு முன் தி. மே. ஐ. ச. தனாதிகாரிக்கு அனுப்பவேண்டும் (விதி 25.)
3. வருடாந்த அறிக்கையை ஐப்பசி 10க்கு முன் தி. ம. மே. ஐ. ச. காரிய தரிசிக்கும் பிரதம அத்தியட்சகருக்கும் அனுப்பவேண்டும் (உபவிதி 8.)
4. புதிய உத்தியோகத்தர்களின் பெயர்களை ஐப்பசி 15க்கு முன் தி. ம. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும் செயலாளருக்கும் அறிவிக்கவேண்டும். (உபவிதி 7.)
5. பிரேரிக்க விரும்பும் தி. ம. மே. ஐ. ச. பதவியாளருக்கான பெயர்களை ஐப்பசி 15க்கு முன் தி. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும் செயலாளருக்கும் அனுப்பவேண்டும். (விதி 17, 2).
6. வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரேரிக்க விரும்பும் பிரேரணைகளை இரு வாரங்களுக்குமுன் பொதுக் காரிய தரிசிக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். (விதி 13 (1)

(இ) பிராந்திய ஐக்கிய சங்கங்கள் :—

வருடாந்த பொதுகூட்டம் புரட்டாசி மாதக் கடைசி வாரத்தில் நடைபெற வேண்டும். (விதி 32).

A. W. அரியநாயகம்
செயலாளர்.
தி. ம. மே. ஐ. சங்கம்,
37, லவாந்தர் ஒழுங்கை,
திருகோணமலை.

---

பெற்றோர் மன்றம்................

[10ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டங்களினாலும், பல திட்டங்களினாலும் உதவிகள் புரிந்து பாதுகாப்பு அளிக்க வேண்டும். கிறீஸ்துவ விசுவாசிகள் தம் சொந்த வாழ்வின் சான்றாலும், நல்ல மனதுள்ள மக்களோடு ஒத்துழைப்பதாலும் திருமணம், குடும்பம் ஆகியவற்றின் நலனை கருத்துடன் முன்னேற்றவேண்டும்.

அறிவியல்களில், சிறப்பாக உயிரியல், மருந்தியல், சமூகவியல், உளவியல் போன்றவற்றில் தேர்ந்தவர்கள் தங்கள் முயற்சிகளையெல்லாம் ஒன்று திரட்டி மக்கட் பிறப்பை ஒழுங்குபடுத்துவதற்கு உதவும் பல்வேறு நிலைமைகளை விளக்குவார்கள் என்றால், அது திருமணம், குடும்பம், இவைகளின் நலனிற்கும், மன அமைதிக்கும் பெரிதும் உதவக்கூடும்.

குடும்பக் காரியங்களைத் தகுந்த முறையில் கற்றறிந்த குருக்கள் மேய்ப்புப் பணிச்குரிய பல்வேறு வழிவகைகளினாலும், இறைவார்த்தையைப் போதிப்பதாலும், இறைவழிபாட்டாலும் பிற ஆன்மீக உதவிகளாலும், மணமக்களின் அழைப்பை அவர்களது திருமண குடும்ப வாழ்வில் பேணி வளர்ப்பதும் துன்பங்களில் இரக்கத்தோடும், பொறுமையோடும் அவர்களைத் தேற்றுவதும், அன்பில் அவர்களை உறுதிப்படுத்துவதும் தங்களுக்குரிய கடமையெனக் கருதுவார்களாயின், உண்மையில் ஒளிவீசும் குடும்பங்கள் உருவாகும்.

இறுதியாகப் பல இயக்கங்கள், சிறப்பாகக் குடும்பக் கழகங்கள், தங்கள் போதனையாலும், செயல்த் திட்டங்களாலும் இளைஞர்களையும், மணமக்களையும், குறிப்பாக அண்மையில் மணமாணவர்களையும், உறுதிப்படுத்தவும், அவர்களுக்குக் குடும்ப சமூக அப்போஸ்தல வாழ்க்கையில் பயிற்சி அளிக்கவும் முயல வேண்டும்.

மணமக்கள் வாழ்வின் ஊற்றான கிறீஸ்துவை, தங்கள் அழைத்தலின் இன்பத்திலும், தியாகத்திலும், தங்களின் உண்மையான அன்பின் வழியாகப் பின்பற்றி, கிறீஸ்து தமது மரணத்தினாலும், உயிர்ப்பினாலும், உலகிற்கு வெளிப்படுத்தியுள்ள அந்த அன்பின் மறை பொருளுக்குச் சான்று பகர்வார்களாக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### இறைவழிபாட்டுச்...........

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ளும் விசுவாசிகளின் உள்ளங்களிலும் இருக்க வேண்டும். கிறிஸ்துநாதர் தாழ்ச்சியுள்ள மனதோடு சிலுவையில் பரம தந்தைக்கு ஆராதனையும், புகழ்ச்சியும், நன்றித்துதியும், பாவப்பரிகாரமும், விண்ணப்பமும் செலுத்தினார். அதேவிதமாக விசுவாசிகளும் தாழ்ச்சியுள்ள மனதோடு திவ்விய பூசை வழியாக இறை தந்தைக்கு ஆராதனையும், புகழ்ச்சியும், நன்றித்துதியும், பாவப்பரிகாரமும், விண்ணப்பமும் செலுத்த வேண்டும். அவர்கள் பலிப்பொருளுக்குரிய தன்மையும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்; அதாவது தங்களுக்கு வரும் துன்ப துயரங்களை நன்மனதோடு ஏற்று, தங்களை ஒறுத்து வாழ மனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இன்னும் திவ்விய பூசைப்பலியில் பூரணமாகப் பங்குபற்றுவதற்குப் பலிவிருந்திலும் பங்குகொள்ள வேண்டும். பூசைக்குமுன் அல்லது பூசை முடிந்தபின் தேவநற்கருணை பெறுவதிலும் பார்க்க, திவ்விய பூசையின்போது பலிவிருந்தருந்துவதே முறையாகும். அவர்கள் குருவானவரோடு சேர்ந்து ஒப்புக்கொடுத்த பலியில் வசீகரம் செய்யப்பெற்ற அப்பத்தின் மூலம் திருவிருந்தருந்துதல் மிகவும் விரும்பத்தக்கது. பூசையில் திருவிருந்தருந்தத் தகுந்த ஆயத்தம் அற்றவர்கள் ஞானவிதமாய்த் திருவிருந்தில் பங்குகொள்ளலாம்.

திவ்விய பூசைப்பலி ஒரு சமூகக் கிரித்தியம். ஆகையால், விசுவாசிகள் அதில் தனித்தனியாக மட்டுமன்றி, பொதுவாகவும் பங்குபற்றல் வேண்டும். இப்பொதுப் பங்குபற்றல் செபங்கள், கீதங்களை ஒன்றாகச் சொல்லுதல் அல்லது பாடுதல், திருவாசங்களைக் கேட்டல், சில சடங்குகளை ஒருமித்துச் செய்தல், இவைபோன்ற வெளியரங்க அம்சங்களால் நிறைவேற்றப்படுகின்றது. இவைகளின் நோக்கம்: விசுவாசிகளின் பத்தியை அருட்டித் தூண்டி, கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய குருவோடு அவர்களை இறுகப் பிணைத்து, அவர்களது உள்ளங்களை கிறிஸ்துவின் உள்ளத்தைப்போலாக்கி இறை தந்தைக்குப் பலியாக்குவதேயாகும்.

2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு முன் விசுவாசிகள் திவ்விய பூசைப்பலியில் நெருங்கிய பொதுமுறையில் பங்கு பற்றுவதற்கு இலத்தீன் மொழி ஒரு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வந்தது. ஆனால் அது இப்போது நீக்கப்பட்டு விட்டது. இப்போது விசுவாசிகள் விளங்கக்கூடிய மொழியில் செபங்கள், பாடல்கள், திருவாசகங்கள் முதலியன நிகழ்கின்றன. இதற்கு நாம் இறைவனுக்கு என்றும் நன்றி செலுத்த வேண்டும். எனவே, திவ்விய பூசைப்பலி எந்தக் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறதோ, அந்தக் கருத்துகளை தாமும் மனதிற்கொண்டு, விசிவாசம், நம்பிக்கை, பரம அன்பு, ஆராதனை, நன்றித்துதி, மனஸ்தாபம் ஆகிய ஆன்ம முயற்சிகளைச் செய்து, யேசுவின் திருப்பாடுகளைத் தியானித்து, திரு வாசகங்களையும் போதகத்தையும் கவனத்துடன் கேட்டு, கீர்த்தனைகளைச் சேர்ந்து பாடி, செபங்களைச் சேர்ந்து செபித்து, குருவோடும் அவர் வழியாகவும் பலியை ஒப்புக்கொடுத்து, பலிவிருந்தில் பங்குகொள்வதே திவ்விய பூசைப்பலியில் பங்குபற்றுவதற்குச் சிறந்த முறையாகும். திவ்விய பலி பூசையில் குரு மட்டுமன்று ''பீட உதவியாளர்கள், வாசகர்கள், விளக்கவுரையாளர், பாடகர் குழுவைச் சேந்தோர், ஆகியோரும் உண்மையில் இறைபணி புரிகின்றனர். ஆகவே, இவர்கள் இம் மாபெரும் பணிக்குத் தகுந்ததும், இவர்களிடமிருந்து இறைவனின் மக்கள் உரிமையுடன் எதிர்பார்ப்பதுமான நேரிய பக்தியுடனும் ஒழுங்குடனும் தத்தம் பணிகளை ஆற்றவேண்டும்'' (இறைபணி 29). ★

---

### திருமறை அறிவு .... .... ....

[12ம் பக்கத் வொடர்ச்சி]

முதலாவது சோதனை: இது இயேசுவின் சொந்த நலனை முன்னிட்டு விடப்பட்ட ஒரு சவால். இது பொருளாதார கைலஞ்சம் போன்றதொன்று. இலவச உணவு மூலம், ஜனங்களை இலேசாக ஒருவர் பக்கம் திருப்பலாம். இரண்டாவது சோதனை: இது, அப்போதைய நேரகாலத்தைப் பொறுத்து, அரசியல் ஆதிக்கத்தை இலேசாகக் கைப்பற்றுவதற்காக, விடப்பட்ட இன்னொரு சவகல். இயேசு அடையவிருக்கும் அரசின் வலிமையும் பெருமையும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதினால், இயேசு, உடனடியாக தம் உலக இராட்சியத்தை ஸ்தாபிக்க முடியும். ''உலக அரசுகள் அனைத்தும்'' என்று கூறுவதினால், லூக்காஸ், இந்தச் சோதனையின் மர்மத்தை எடுத்துக் காட்டுகின்றார். இப்படியான நினைவுகள் பல, இயேசவின் மனதில் உதித்திருக்கலாம். மூன்றாவது சோதனை: மக்களை

[15ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**செல்வந்தரின் செல்லப்............**

[11ம் பக்கத் தொடர்ச்சி]

பைகளில் கைவிடும் புதியதொரு பழக்கத்தையும் கற்றுக்கொண்டான். இப்படியாக இவன் வாழ்க்கை பல ஆண்டுகளாக உருண்டோடின.

ஆரம்பத்தில் சிறிய களவு செய்தவன் இப்பொழுது பயங்கரம் மிகுந்த பெரிய கொள்ளைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டான். இதனால் போலீசார் விக்ரரைக் கைது செய்யத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். ஒரு சமயம் விக்ரர், பெரிய கொள்ளையொன்றை நடத்திவிட்டுப் போலீசாரின் பிடியில் இருந்து நழுவுவதற்காக காரில் மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். போலீசாரின் ''ஜீப் வண்டியும்'' விடாது துரத்திக் கொண்டிருந்தது. இவன் தப்பித்துக்கொள்வான் என்பதையுணர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்ரர் கைத்துப்பாக்கியால் கார் ரயருக்குச் சுட்டார். சில நிமிடத்தில் கார் நின்று விட்டது. காரில் இருந்து பாய்ந்த விக்ரர் தப்பித்துச் செல்வதற்குமுன் இன்ஸ்பெக்ரரின் கையில் இருந்த துப்பாக்கி விக்ரரின் முதுகைப் பதம்பார்த்துவிட்டது. விக்ரர் தள்ளாடிய படியே கீழே விழுந்தான். அப்பொழுது அவன் உயிரோடு போராடிக்கொண்டிருந்தான். ஓடி வந்த இன்ஸ்பெக்ரர் விக்ரரைத் தூக்கினார். இருவரின் கண்களும் ஒருவரை யொருவர் நோக்கினர். ஏதோ ஒருவித பாசத்தினால் இருவரின் கண்களும் கலங்கின. பல ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் இருவரின் மனக்கண்முன் தோன்றின. ''குமார்,'' என்றபடி வாய்விட்டுக் கதறினான். விக்ரர். விக்ரர் அழுதவாறு கூறினான், ''குமார், இருவரும் ஒன்றாகப் படித்தோம், ஒன்றாகப் பழகினோம். நான் என் துர்ப்பழக்கத்தினால் என் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டேன். குடி என்னைக் குட்டிச் சுவர் ஆக்கி விட்டது. நீ உனது நற்பழக்கத்தினால் உனது வாழ்க்கையைச் சரிவர அமைத்துக் கொண்டாய். குமார்! ஒரு உத்தமனின் கையால் நான் சாகிறதையிட்டுச் சந்தோஷப்படுகின்றேன்'' குமார் அவனைத் தேற்றியவாறு ''அழாதே விக்ரர், விதி இப்படியாக மாற்றி விட்டது; நீ இப்பொழுது நல்லவன். நீ செய்த பிழைகளையெல்லாம் இப்போது உணர்ந்து விட்டாய்'' இதைக் கேட்ட விக்ரர், என்னா? நான் நல்லவனா? குமார், இத்தனையோ பெரிய தவறுகளைச் செய்த நானா நல்லவன்? என்று சொல்லி அழுதான். குமார் வேதனைகலந்த சிரிப்போடு ''விக்ரர்! தவறு செய்கின்றவன் எப்போது தன் தவற்றை ஒப்புக்கொண்டு அதற்காக வருத்தப்படுகிறானோ, அன்றிலிருந்து அவன் பெரும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட நல்ல மனிதனாகின்றான்'' இந்த இனிமையான வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த விக்ரரின் ஆன்மா அவன் உடலைவிட்டுப் பிரிந்தது. தரையிலே கிடந்த விக்ரரின் உடலைத் தனது தோளிலே சுமந்தபடி ''இன்ஸ்பெக்ரர் குமார்'' ஜீப் வண்டியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். தனது நண்பன் திருந்தி இறந்தான் என்ற பெருமை குமாருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

[யாவும் கற்பனை] ★

---

**திருமறை அறிவு .... .... ....**

[14ம் பக்கத் தொடர்ச்சி]

உடனே நம்பவைத்து, அவரைப் பின்தொடர வைப்பதற்கு, புதுமையான ஒரு காரியத்தைச் சாதிக்கும்படி இச் சவால் விடப்படுகின்றது. கிறீஸ்து புதுமைகளைச் செய்தார். அவைமூலம் மக்களைத் தன்பக்கம் கவருவதற்காக அல்ல. பிறருடைய நன்மையையும், நலனையும் முன்னிட்டே அவர் புதுமைகளைச் செய்தார். தன் சொந்த நன்மைக்காக, நலனுக்காக, அவர் ஒரு புதுமையும் செய்யவில்லை.

கிறீஸ்து இந்த மூவித சோதனைகளையும் (உணவு, புகழ், மாய்கை) ஜெயித்து, வெற்றி வீரனாக வெளியேறுவதை, வேதாகமத்தில், நாம் வாசிக்கின்றோம். சோதனையின்போது இயேசு, மனித வழியை அல்ல, தேவ வழியையே தெரிந்தெடுத்தார். எனினும், இவ்வித சோதனைகள், அடிக்கடி அவரிடம் வந்திருக்கின்றன. ஜெத்சமனி தோட்டத்தில், இயேசுவுக்கு வந்த சோதனைகள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. ''அலகை எல்லா விதத்திலும் இயேசுவைச் சோதித்தபின்பு, குறித்த காலம் வரும்வரைக்கும் அவரை விட்டுச் சென்றது.'' என்று கூறி, லூக்காஸ் மிகவும் நுணுக்கமாக கதையை முடிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நல் ஆயர்............

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குருக்கள்மீது கொண்டுள்ள பற்றுக்கும். பாசத்திற்கும் எந்த விதத்திலும் குறையாதது, ஆண்டகை அவர்கள் தமது ஆளுகைக் குட்பட்ட மக்கள் மீது கொண்டிருக்கும் அன்பும் உறவும். எந்தவித பேதமும் பாராட்டாது எல்லா இன மக்கள் மீதும் தமக்குள்ள கடமை உணர்வைச் சரிவரப் புரிந்துகொண்டு அவர்களின் ஆன்ம நலனைக் கவனிக்க குருக்களைக் கொடுத்துதவியும், கோவில்களைக் கட்டிக் கொடுத்தும் அவர் ஆற்றும் பணி போற்றுதற்குரியதன்றோ? மேலும் ஆண்டகை அவர்களிடம் நிறைந்துள்ள அறிவு, ஆற்றல், சிறந்த நற்பண்புகள் காரணமாக சிலாப மறை மாநிலத்திற்கு பரிசுத்த தந்தையின் தரிசகராக நியமிக்கப் பட்டதை நம்மில் பலரும் அறிவர்.

திருமறைக் கல்வியைப் பொறுத்தவரையிலும் நமது ஆயரின் அயராத உழைப்பினால் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டு வருவது கண்கூடு. குருக்களோடு இணைந்து மறை போதகம் செய்வதற்கென பன்னிரண்டு இளைஞர்களை தென்னிந்தியாவுக்கு அனுப்பி பயிற்றுவித்திருப்பது ஆயருக்கு திருமறைக் கல்வி வளர்ச்சியில் உள்ள ஈடுபாட்டை நன்கு விளக்குகின்றது. இப்பணியில் இம்மறை மாவட்டத்தைச் சேர்ந்த கன்னியர்களும் இதய நிறைவோடு ஈடுபட்டு உழைப்பது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

இதைப் போன்றே பொதுநலப் பணி புரிய பெருமளவில் பணம் செலவிட்டு சமூக சேவை நிலைய மொன்றை நிறுவி, மேலும் பல இளைஞர் இயக்கங்களை தமது குருக்கள்மூலம் ஏற்படுத்தி மக்கள் தொண்டில் தம்மை முற்றாக ஈடுபடுத்திவரும் ஆயர் அவர்களின் இருபத்தி மூன்றாவது ஆண்டு மேற்றிராணித்துவ அபிஷேகத்தை நினைவுறும் இவ்வேளை தேவமாதாவின் மேற்கொண்ட பத்தியின் காரணமாக அவளின் பாதுகாவலின் கீழ் இந்த மறை மாவட்டத்தை நடாத்திக் கொண்டு வரும் நமது ஆண்டகை அவர்கள் இன்னும் பல்லாண்டு நலமோடு வாழ்ந்து, நற்பணி பல செய்ய நாயகன் இயேசுவை நாம் இறைஞ்சக் கடமைப்பட்டுள்ளோம்.

# மனித தெய்வம்

—★—

மனித தெய்வ மொன்று — எங்கள்
மறை மாநிலத்தில்
புனித ஆட்சி செய்கிறது — அந்தப்
புதுமை சிறிது சொல்வேன்!

ஈர்பத்து மூன்று — ஆண்டு
இறை பணிகள் செய்யும்
ஓர் உயர் பெரியோன் — இந்த
உண்மை நாடறியும்!

தன்னலம் சிறிதும் — என்றும்
தன் பக்கம் கொள்ளா(ப்)
பொன் மன மனிதன் — அவன்
புகழ் மிகப் பெரிது!

தேசத்தால் மட்டுமா? — தாங்கும்
தேகத்தால் மட்டுமா..............?
பேசுகின்ற முறையாலும் — பிறரைப்
பேணுகின்ற விதந்தாலும்,

வெள்ளைக் காரனவன் — இது
வெறும் புகழ் மொழியல்ல!
கள்ள மனம் கூட — இவன்
கண்டால் தூய்மையாகும்!

துறவி எனும் சொல்லுக்கு — இவன்
தோற்றம் பொருள் கூறும்
பிறவி இவன் பிறவி — இங்கு
பெறற் கரிய பிறவியடா!

பேராசை இல்லை — உலகப்
புகழாசை இல்லை
ஊராசை இல்லை — இவனுக்கு
ஓராசை உண்டு!

ஓராசை என்றேன் — அது
உல கெலாம் கிறிஸ்துவின்
பேரொளிக்க வேண்டும் — என்னும்
பேராசை தம்பி!

பற்பல ஆண்டு — இவன்
பாரிலே வாழ்ந்து
நற்பணிகள் செய்ய — உலக
நாயகனை வேண்டுவோம்!

''வாகரை வாணன்''

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். வ. தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 1-9-70ல் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media